மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காரியாபட்டி,
**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
காரியாபட்டி.
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.6/2025**

IN

**அசல் வழக்கு எண். 114/2024**

பச்சி ... **மனுதாரர் /வாதி**

/எதிர்/

1. முத்து
2. பாண்டியம்மாள்
3. மூக்கம்மாள்
4. இருளாயி
5. கருப்பாயி
6. ஆண்டி
7. ராமன்
8. சார்பதிவாளர், காரியாபட்டி
9. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதியான
விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம்

...... **எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்**

இம்மனுவானது 31.10.2025 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 06.03.2026 வந்தபோது, மனுதாரர்/ வாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.கந்தசாமி அவர்களும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தெறிராஜன் அவர்களும் முன்னிலையாகியும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜர் இல்லாததால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், இருதரப்பினரும் செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 6 ரூல் 17,18 மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் கண்டுள்ள 1வது இலக்க சொத்துக்கள் முழுவதையும் பிராதில் இருந்து நீக்கம் செய்து மனுவில் கண்டுள்ள விபரப்படிக்கு பிராதை சீர்திருத்தம் செய்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனு தாக்கல்.

**2.மனுதாரர்/ வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர்/ வாதி தரப்பில், அசல் வழக்கில் 1வது இலக்க சொத்துக்கள் தனக்கு பாத்தியமில்லாத 3 வது நபரான முத்து மூப்பர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். ஆனால், மனுதாரரின் தகப்பனார் மற்றும் தாத்தா பெயர் முத்து என்பதால் அதனடிப்படையில் 3வது நபருக்கு பாத்தியப்பட்ட 1வது இலக்க சொத்துக்களை வழக்கில் மனுதாரர் தவறுதலாக சேர்த்துள்ளார். மேற்படி 1வது இலக்க சொத்துக்களுக்கும் மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. எனவே, அசல் வழக்கின் பிராதில் கண்டுள்ள 1வது இலக்க சொத்துக்கள் முழுவதையும் நீக்கிவிட்டு மனுவில் கண்டுள்ள விவரபடிக்கு பிராதை சீர்திருத்தம் செய்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த வேண்டுமென்று கூறியுள்ளார். மேற்படி தவறானது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானதாகும். மேலும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் அது எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பும் ஏற்படபோவதில்லை. எனவே, மேற்படி விவரபடிக்கு பிராதை சீர்திருத்தம் செய்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகள் மறுப்புரையின் சுருக்கம்:–**

1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில், 11.08.2022ம் தேதியன்று பதில் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு, வாதி தரப்பில்

21.03.2024ம் தேதியன்று முதல்விசாரணை தொடங்கப்பட்டுவிட்டது என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் 20.02.2025ம் தேதியன்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுவிட்டது என்றும், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவிடாமல் காலம் தாழ்த்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர் /வாதியின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>5. தீர்வு முடிவு:–</u>

5(1).இம்மனு, எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர் /வாதி தரப்பில், தங்களுக்கு பாத்தியமில்லாத சொத்துக்களான 1வது இலக்க சொத்துக்களை தவறுதலாக பிராதில் சேர்த்துவிட்டதாகவும், எனவே, மேற்படி பிராதில் 1 வது இலக்க சொத்துக்களை முழுவதுமாக நீக்கிவிட்டு மனுவில் கண்டுள்ள விவரபடிக்கு அசல் வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்துகொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

5(3). 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் /1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில், மனுதாரர் அசல் வழக்கின் விசாரணையை காலங்கடத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது எதிர்மனுதாரர்களின் வாதமாகும்.

5(4). அசல் வழக்கில் மனுதாரர்/வாதி தாவா சொத்து குறித்து பாகப்பிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில், மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள பிராதில் தவறுதலாக 1வது இலக்க சொத்துக்களை சேர்த்து விட்டதாகவும், அதனை நீக்கிவிட்டு மனுவில் கண்ட விவரபடிக்கு அசல்

வழக்கின் பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கூறியுள்ளார். மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் **In LIC Vs Sanjeev Builders** முன்தீர்ப்பினை பரிசீலிக்கையில் " *In dealing with a prayer for amendment of pleadings, the court should avoid a hypertechnical approach, and is ordinarily required to be liberal especially where the opposite party can be compensated by costs"*

இவ்வாறு தீர்ப்பளித்துள்ளது. அதனடிப்படையில் மனுதாரர் மனுவில் கூறியுள்ள சீர்திருத்த விபரங்கள் அசல் வழக்கின் பிராதை சீர்திருந்தம் செய்து கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கிறது. மேலும் வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதாரர்/ வாதி தரப்பு ஆதாரங்களை முன்னிறுத்த மனுதாரர்/ வாதிக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித அநீதி ஏதும் விளைவிக்கப்படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும், மனுதாரர் / வாதி ரூ.500/–ஐ 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக 7.04.2026 ம் தேதி தேதிக்குள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவில் கூறப்பட்டவாறு அசல் வழக்கின் பிராதை திருத்தம் மேற்கொள்ள மனுதாரர்/வாதிக்கு அனுமதி வழங்கி இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

<u>6. இறுதிமுடிவு:–</u>

முடிவாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இருப்பினும், மனுதாரர் / வாதி ரூ.500/–ஐ 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு செலவுத் தொகையாக 7.4.2026 ம் தேதி தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படுமென்றும், தவறும் பட்சத்தில் இம்மனு

தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்.</u>**

இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி,
IA.No. 06/2025
in
O.S.No. 114/2024
உத்தரவு
நாள். 30.03.2026